**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண். 3213/ஆ1/2026 நாள் : .07.2026**

---

**பொருள் :** பள்ளிக்கல்வி - டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2026 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் - சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக EMIS இணையதளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட மென்பொருள் உருவாக்குதல் - நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் - தங்கள் விவரங்களை EMIS இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்திட வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்புதல் - தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (1டி) எண்.220 பள்ளிக் கல்வி (பொது - II ) துறை, நாள்.05.08.2022.
2. சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.010095/ஐ/இ1/2026, நாள்.15.07.2026.

-----

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து வகை தொடக்க /நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2026 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் தொடர்பாக சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக EMIS இணையதளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளதைப் பயன்படுத்தி மாநில நல்லாசிரியர் விருது பெற விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள், தங்கள் விவரங்களை EMIS இணையதளம் மூலம் 17.07.2026 அன்று முதல் 03.08.2026 -க்குள் முழுமையாக பதிவேற்றம் செய்திட வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை -2 இல் காணும் கடிதத்தில் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் பொருள் சார்பாக பெறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி EMIS இணையதளம் மூலம் 17.07.2026 அன்று முதல் 03.08.2026 -க்குள் முழுமையாக பதிவேற்றம் செய்திட அனைத்து வகை அலுவலர்கள் மற்றும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**

பார்வை - 2 இல் காணும் இயக்குநரின் கடித நகல்

( மின்னஞ்சல் மூலமாக)

16/7/26

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

16/7/2026

**பெறுநர் :**

1. முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்டத் திட்ட அலுவலர் வேலூர் கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.
4. அனைத்து வகை உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல் :**

1. சென்னை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. கோப்பிற்கு.